**<u>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்</u>**

**அசல் வழக்கு எண். 274/2021**

**வா.சா.1 –பிரபு**

**<u>12–06–2025 சாட்சி அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு 2 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. இவ்வழக்கு எனது இடத்தில் Transformer போட முயற்சிசெய்து மிரட்டியதால் தாக்கல் செய்துள்ளேன். எந்த காலை என்றால் 21 காலை. 21 காலை 3.82 ஏக்கர் விஸ்தீரணம் என்றால் சரிதான். அதில் 40 செண்டை 1ம் பிரதிவாதி முத்துலட்சுமிக்கு விற்றுவிட்டோம் என்றால் சரிதான். அந்த 40 செண்டுக்கு 25 அடி அகலம் தடப்பாத்தியம் க.ச. எண் 21ல் கொடுத்துள்ளோம் என்றால் வண்டி வாகனம் ஓட்டிக்கொள்ள கொடுத்துள்ளோம்.

2. கிழமேல் சாலையில் இருந்து க.ச. எண். 7/2 மற்றும் க.ச.எண். 8 ஐ கடந்து சென்றால் மேற்படி 25 அடி அகல தடம் வரும் என்றால் சரிதான. க.ச. எண். 8/2A ல் உள்ள கிழமேல் 25 அடி அகல தடமும், க.ச. எண். 21ல் 25 அடி அகல தடமும் நாங்கள் விட்டது. மேற்படி நாங்கள் விட்ட க.ச.எண்.21ல் உள்ள தடம் முத்துலட்சுமியின் தனிப்பட்ட தடம் என்றால் சரியல்ல. எங்கள் பூமிக்குள் நாங்கள் செல்வதற்கும் முத்துலட்சுமி வண்டி வாகனம் ஓட்டிக்கொள்வதற்கும் விடப்பட்ட தடம்.

3. எனது பூமிக்கு தென்வடச் சாலையை ஒட்டி உள்ளது என்றால் சாலையை ஒட்டி 50 செண்டு க.ச.எண். 8ல் உள்ளது. முத்துலட்சுமிக்கு தாவா தடத்தை விட்டால் வேறு தடம் இல்லை என்றால் எனக்கு முத்துலட்சுமிக்கும் அவரவர் பூமிக்கு செல்வதற்கு மேற்படி க.ச.எண். 21ல் உள்ள தடத்தை விட்டால் வேறு தடம் இல்லை. முத்துலட்சுமி அவரது 40 செண்டில் குடோன் கட்டியுள்ளார் என்றால் சரிதான். அதற்கு எவ்வளவு செலவாகியிருக்கும் என்றால் சரிதான்.

4. பெரும் தொகை செலவு செய்து முத்துலட்சுமி குடோன் கட்டி அதற்க்கு மின் இணைப்பு கொண்டுசெல்ல விண்ணப்பம் செய்தபோது தான் மேற்படி தடத்தில் கொண்டு செல்லக்கூடாது என்று மேற்படி ஆட்சேபணை செய்தோம் என்றால் முத்துலட்சுமி அவரது பூமியில் கிழகோட்டில் கட்டியுள்ள வீட்டிற்கும் தென்னைமரத்திற்காகவும் ஏற்கனவே மின் இணைப்பு பெற்றுவிட்டார். தற்போது மேற்கோட்டில் கட்டப்பட்ட குடோனிற்காக 3 மின் கம்பங்களை அமைக்கவும், Transformer எங்கள் இடத்தில் அமைக்கவும் முயற்சிக்கிறார்.

5. முத்துலட்சுமியின் பூமியில் ஏற்கனவே மின் கம்பம் உள்ளதை காண்பிக்க ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் புகைப்படம் தாக்கல் செய்துள்ளேன். நீதிமன்ற ஆணையரை அழைத்துச்சென்றேனா என்றால் இல்லை. நானே முத்துலட்சுமிக்கு பூமியை கிரையம் செய்து கொடுத்து தடப்பாத்திய உரிமை வழுங்கியுள்ளதால் நானே மின் இணைப்பை எடுத்துச்செல்ல கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல. 40 செண்ட் பூமியை தொழிலுக்காக வாங்கினேன் என்றால் சரியல்ல. தொழிலுக்காக வாங்கிய பூமியை திரும்பிபெறுவதற்காக மின் இணைப்பு எடுத்துச்செல்ல தடையாக உள்ளேன் எனறால் சரியல்ல.25 அடி அகல தடத்தின் ஓரத்தில் மின் கம்பம் நடுவதால் அதனை உபயோகிப்பதற்கு எவ்விதத்திலும் இடையூறாக இருக்காது என்றும் வேனும் என்றே இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

(குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது)

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

ஒம்/- திருமதி. A.சுபஸ்ரீ,L.L.M.,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.